**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை**

**ஒ.எஸ்.89/2019**

**2025-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ம் நாள் திங்கள்கிழமை**

**வாதி-பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1)ன் படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.எஸ்.செல்லபாண்டியன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **கண்ணன்** | **சாதி** | : | |
| **த.பெ** | : | | **சமயம்** | : | |
| **கிராமம்** | : | | **தொழில்** | : | |
| **வட்டம்** | : | | **வயது** | : | |

**வா.சா. 2 கண்ணன் ஆஜர்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

வாதி தனிக்கொடி எவ்வளவு இடத்திற்கு வழக்கு போட்டு உள்ளார் என்றால் 3 3/4 செண்டிற்கு போட்டுள்ளார். அவருக்கு 2 செண்டு மட்டும் தான் பாத்தியம் என்று சொல்லுகிறார்கள் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் காலத்தில் வாதிக்கு 2 செண்டிற்கு மட்டுமே பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி இடத்திற்கு மேற்கு பக்கத்தில் காலி இடம் உள்ளது என்றால் இல்லை. வாதி இடத்திற்கு மேற்கே வீதி இருப்பதாக சொல்லுவதில் மேற்படி வீதி அரசு ஆவணங்களில் இல்லை என்றால் தவறு. தாவா சொத்திற்கும் தெற்கு பக்கத்தில் கோவில் வீடு உள்ளது என்றால் சரியல்ல. வாதியின் வீட்டின் நீளம், அகலம் எனக்கு தெரியாது. நான் பாதை என்று சொல்வது பிரதிவாதிகளும் அவரது பங்காளிகளும்

கோவில் வீட்டிற்கு செல்வதற்காக அமைக்கப்பட்ட பாதை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன பாதை என்ற இடமும் அதற்கு கிழக்கே உள்ள இடமும் பிரதிவாதிக்கு பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. நான் வாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

District Munsif,
Manamadurai.